வெண்பாக்கம் பகுதிக்கு மாற்ற முயற்சி எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கருத்தில் கொண்டு, செயலாற்றுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

7—

கோரா உற்பத்தி

***6252—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுச் சேலைகள் தயாரிக்கத் தமிழ்நாட்டிலேயே கோரா உற்பத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் பட்டுச் சேலைகள் தயாரிக்கத் தேவையான கோரா பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 738.85 மெட்ரிக் டன் கோரா பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில் 800 மெட்ரிக் டன் கோரா பட்டு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு, அக்டோபர் 2006 முடிய 643.55 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தற்சமயம் கோரா பட்டு தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள.

2007 ஏப்ரல் 2]

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூர்போன்ற மற்ற மாநிலப் பகுதியிலிருந்து கோராவை இன்னும் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அதனால், கோராவைத் தமிழ்நாட்டிலேயே அதிகமான அளவிலே உற்பத்தி செய்தால், பட்டுத் தொழில் வளர்ச்சிபெற ஏதுவாக இருக்கும். அதனால் தமிழ்நாட்டிலேயே அதிக அளவு உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இலாபம் தரக்கூடிய விவசாயப் பயிர்களில், மல்பரிச் செடி வளர்த்துப் பட்டு உற்பத்தி செய்யும் தொழில் முதலிடத்தில் இருக்கிறது. எனவே இத்தொழில் வளர, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரைப்படிப் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகின்றோம். குறிப்பாக, ஒரு ஏக்கருக்கு உயர் விளைச்சல் தரும் மல்பரிப் பயிர்கள் நடவு செய்வதற்காக மத்திய, மாநில அரசுகள் மானியமாக 1,000 ரூபாயும், சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுவதற்காக ஒரு ஏக்கருக்கு மத்திய, மாநில அரசுகள் மானியமாக 16,100 ரூபாயும், தனியாகப் பட்டுப் புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு மானியமாக 50,000 ரூபாயும், புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக 25,500 ரூபாயும், மண் புழு தயாரிப்புக் கூடம் கட்டுவதற்காக 10,500 ரூபாயும், தரமான கிருமிநாசினிகள் விநியோகம் செய்வதற்கு மானியமாக 1,435 ரூபாயும், ஆக, ஒரு ஏக்கருக்கு ஒரு விவசாயிக்கு 1,04,535 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. ஆகவே, தாங்கள் சொன்னபடி தமிழகத்திலேயே முழுவதுமாகப் பட்டுக்குத் தேவையான நூல்களை எதிர்காலத்தில் உற்பத்தி செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, பட்டுச் சேலைகள் தயாரிப்பதற்குத் தனியாக அரசு மானியம் வழங்க முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது கைத்தறித் துறையைச் சார்ந்த கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் கைத்தறித் துறை அமைச்சரிடம் கேட்குமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு உற்பத்தி செய்கிற விவசாயிகள், அந்த குக்கூன் கூடுகளை மைசூருக்கு எடுத்துச் சென்றுதான் விற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. சில நேரங்களில் கர்நாடகக் காவிரி நீர்ப் பிரச்சினை வருகிறபோது, அவர்கள் சென்று விற்க முடியாத சூழ்நிலைகள் ஏற்படுகிற காரணத்தினால், தமிழ்நாட்டிலேயே, கோவை அல்லது ஈரோடு மாவட்டத்தில், ஏதாவது ஒரு நகரத்தை மையமாக வைத்து விற்பனை நிலையத்தைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை உங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே மொத்தம் 17 இடங்களில் பட்டு விற்பனை மையங்கள் மற்றும் வாங்கும் மையங்கள் இருக்கின்றன. கோவை, அதேபோல ஈரோடுபோன்ற இடங்களில் இருக்கின்றன. நடமாடும் பட்டுக் கூடுகளை வாங்குகின்ற நிலையங்களை அடுத்த ஆண்டு ஏற்படுத்த இருக்கின்றோம். ஆகவே, இனிமேல் மைசூருக்குப் போக வேண்டிய அவசியம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுச் சேலை உற்பத்தியில் காஞ்சிபுரம், ஆரணிபோன்ற பகுதிகளில் மிகப் பெரிய அளவில் நெசவாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். 200–க்கும் மேற்பட்ட பட்டு முறுக்காலைகள் ஆரணிப் பகுதியில் இருக்கின்றன. பெரும் பகுதியான பட்டு முறுக்கேற்றப்பட்டு, காஞ்சிபுரம், கும்பகோணம் ஆகிய பகுதிகளுக்கு ஆரணியிலிருந்துதான் எடுத்துச் செல்லப்படுகிறது. எனவே, விவ்சாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே ஆரணிப் பகுதியில் டான்சில்க் பட்டு மல்பரிச் செடிப் பயிர் வைக்கின்ற அலுவலகங்களைத் துவக்க ஆவன செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஆவன செய்யப்படும்.